செ.வெ.எண்: 492 பத்திரிகை செய்தி நாள்: 18.08.2009

இன்புளுயன்சா A (H1N1) நோய் சிகிச்சை குறித்த மத்திய அரசாங்கத்தின் தற்போதைய வழிமுறைகள்:

இன்புளுயன்சா A (H1N1) நோயாளிகள் மூன்று வகைகளாக பிரிக்கப்பட்டு அவர்களுக்கு தேவையான பரிசோதனைகள், தரவேண்டிய சிகிச்சைகள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் குறித்தான ஆலோசனைகளை வழங்கியுள்ளது

வகை I :

- சாதாரண காய்ச்சலுடன் கூடிய இருமல் மற்றும் தொண்டைவலி காணப்படும் நோயாளிகள். இவர்களுக்கு உடம்பு வலி, தலை வலி, வயிற்றுப்போக்கு மற்றும் வாந்தி இருக்கலாம் அல்லது இல்லாமலும் இருக்கலாம்.
- இந்த நோயாளிகளுக்கு Oseltamavir/டாமிபுளூ மருந்து தேவையில்லை. இரண்டு நாட்களுக்கு தொடர் கண்காணிப்பில் இருப்பது அவசியம்.
- A (H1N1) ஆய்வக பரிசோதனை தேவையில்லை
- இந்நோயாளிகள் வீட்டில் ஓய்வெடுத்து கொள்ளும்படியும் மற்ற நபர்களுடன் தொடர்பினை குறைத்து கொள்ளவும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.
- இருமல், தும்மல் இருந்தால் கைக்குட்டைகளை பயன்படுத்திட வேண்டும். பயணங்களை தவிர்ப்பது நல்லது.

வகை 2 :

- வகை ஒன்றில் காணப்படும் நோய் அறிகுறிகளுடன் கடுமையான காய்ச்சல் மற்றும் கடுமையான தொண்டைவலி இருக்கும் நிலை
- வகை ஒன்றில் காணப்படும் நோய் அறிகுறிகளுடன் காணும் நபர் ஐந்து வயதுக்கு உரிய குழந்தையாகவோ, கர்ப்பிணியாகவோ, 65 வயதிற்கு மேல் உள்ள முதியவராகவோ அல்லது நுரையீரல், இருதயம், கல்லீரல், சிறுநீரகம், நீரழிவு, நரம்பு, ரத்தம் மற்றும் எச்ஐவி/எய்ட்ஸ் நோய்களால் பாதிக்கப்பட்டிருந்தாலோ
- Oseltamavir/டாமிபுளூ மருந்து கொடுக்கப்பட வேண்டும். ஆய்வகப் பரிசோதனை தேவையில்லை.
- வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டு ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும்.

வகை 3 :

- மேற்கூரிய வகை I மற்றும் வகை 2-க்கான அறிகுறிகளுடன் மூச்சுத்திணறல், நெஞ்சுவலி, மயக்கம், குறைந்த ரத்த அழுத்தம், ரத்தத்துடன் கலந்த சளி, நீல நிறமாகும் நகங்கள், குழந்தைகளை பொருத்தவரை உணவு அருந்ததாத நிலை ஆகிய சூழ்நிலைகளில்
- A (H1N1) ஆய்வகப் பரிசோதனைக்கு உட்படுத்திட வேண்டும்
- மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட வேண்டும்
- Oseltamavir/டாமிபுளூ மருந்து கொடுக்கப்பட வேண்டும்

❖ எனவே சாதாரண ஜலதோஷம் உள்ளவர்கள் அனைவரும் A (H1N1) ஆய்வுசெய்திட வேண்டிய அவசியம் இல்லை

❖ மருத்துவர் ஆலோசனையின் பேரிலேயே பரிசோதனை செய்து கொள்வது அவசியம்

❖ தேவையற்ற நிலையில் Oseltamavir/டாமிபுளூ மாத்திரைகளை பயன்படுத்தாமல் இருத்தல் நல்லது

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9